அவர்கள் கைத்தறித்துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்குவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெறாமல் அதிகாரிகளின் நேரடிப் பார்வையில் இருக்கிற காரணத்தால், நெசவுத் துறையில் பயிற்சி பெற்றிருக்கிற நெசவாளர்களை ஆலோசகர்களாகப் போட்டு அதன் மூலமாக நஷ்டத்தில் இயங்குகிற சங்கங்களை லாபத்தில் இயங்குவதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்தில் இயங்குகிற சங்கங்கள் அனைத்தும் இப்போது நஷ்டம் ஏற்பட்டவை அல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னாலிருந்தே பல இலட்சக்கணக்கான ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவைகளை சீர்திருத்துவதற்குரிய பல நல்ல நடவடிக்கைகள் எல்லாம் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 3, 4 மாத காலத்திற்குள்ளாக அந்த நெசவாளர் சங்கங்களை எல்லாம் சீர்திருத்தி அமைக்கப்படக் கூடிய நல்ல திட்டங்கள் வெகுவிரைவில் அறிவிக்கப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 515, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

515—

ஆரணி தொகுதியில் அரசுக் கல்லூரி நிறுவுதல்

***36228—**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதியில் உள்ள ச.வி.நகர ஜமீன் அரண்மனையில் அரசுக் கல்லூரி நிறுவ அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அடுத்த நிதியாண்டில் இங்கு கல்லூரி ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை சபாநாயகராக இருந்தபோது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கொறடாவாக இருந்தபோது, இவர்கள் இருவரையும் நானே நேரடியாக அழைத்துக்கொண்டு போய் இந்த ஜாகீர் அரண்மனைக்கு சென்று கிட்டத்தட்ட 3, 4 மணி நேரம் அரண்மனையில் இருக்கிற கட்டடங்களைப் பார்வையிடச் செய்து, அங்கே ஒரு கல்லூரியைத் தொடங்குவதில் மற்ற கல்லூரியைத் தொடங்குவதைப் போல முதலீடு தேவை இருக்காது என்பதை அவர்களும் உணர்ந்துகொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் கூட நிச்சயமாக அரசுக்கு நான் பரிந்துரை செய்கிறேன் என்று அன்றைக்கு சொன்னார். இன்றைக்கு அவரே கல்வி அமைச்சராக அமர்ந்து இருக்கிறார். ஆகவே, அவர் கல்வி அமைச்சராக ஆனவுடன் நான் நினைத்தது என்னவென்றால், நிச்சயமாக ஆரணிக்கு ஒரு கல்லூரி வந்துவிடும் என்றுதான் நினைத்தேன். இருந்தாலும் கூட நிதிநிலை சரியாக இல்லையென்று சொன்னார்கள். அதை ஒப்புக்கொள்கிறேன். அந்த இடத்தில் ஒரு கல்லூரியைத் தொடங்குவதற்கு, புதியதாக ஒரு கல்லூரியை ஆரம்பிக்கிற அளவுக்கு அதிகமான முதலீடு அரசுக்கு தேவைப்படாது. ஏனென்றால் அங்கே கட்டிடங்கள் இருக்கின்றன. இடவசதி இருக்கிறது. ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து நிதிநிலையைப் பொறுத்து ஆரணிக்கு ஒரு கல்லூரியை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அதைப்போல தனியார் கல்லூரியை அமைக்க தனியார்கள் முன்வந்தால் நிச்சயமாக அதை அரசு பரிசீலிக்கும் என்று கூட பல கேள்விகளுக்கு அமைச்சர் அவர்கள் விடை அளித்திருக்கிறார்கள். அப்படி யாராவது தனியார் முன்வந்தால் அவர்கள் அதிகமான அளவுக்கு முதலீடு செய்ய

வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஜாகீர் அரண்மனை கல்வித் துறைக்கு சொந்தமாக இல்லாமல் போனாலும் கூட அந்த ஜாகீர் அரண்மனையை, அப்படி தனியார் கல்லூரி தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு குத்தகைக்கு தந்து, அங்கே ஒரு கல்லூரி நிறுவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலை காரணமாக அரசு கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அறவே இல்லை. தனியார் அமைப்பதற்கு முன்வந்தால் அரண்மனையைக் குத்தகைக்கு தருவார்களா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆரணி தொகுதியில் இருக்கிற சத்திய விஜய நகர ஜமீன் அரண்மனை கல்வித் துறையின் பொறுப்பிலே இல்லை. அதையும் உறுப்பினர் அவர்களே ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, தொடர்புடைய துறையை உறுப்பினர் அவர்கள் அணுகலாம்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் கல்லூரி தொடங்க முன்வந்தால் அவர்கள் என்னென்ன வழிமுறைகளை, விதிமுறைகளை, பின்பற்ற வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் முகமைகள் சுயநிதிக் கல்லூரி தொடங்க முன்வந்தால், அவர்கள் முதலில் பதிவுபெற்ற முகமையாக இருக்கவேண்டும். 500 ரூபாய் தொகை செலுத்தி அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அந்த அறக்கட்டளையின் பெயரில் 10 ஏக்கர் நிலம் கிராமப்புறப் பகுதியாக இருந்தால் இருக்கவேண்டும். நகர்ப்புறப் பகுதியாக இருந்தால் 5 ஏக்கர் நிலம் இருக்கவேண்டும். 10 இலட்சம் ரூபாய் கல்லூரி கல்வி இயக்குநர் பெயரிலும், அறக்கட்டளையின் பெயரிலும் அறக்கட்டளையாக வைத்திருக்க வேண்டும். கல்லூரி தொடங்குவதற்கு தேவையான தற்காலிக இடம், கட்டிடம், ஆய்வக வசதிகள், விளையாட்டு இடம், தகுதி பெற்ற ஆசிரியர்கள் எல்லாம் இருக்கவேண்டும். இருந்தால் அரசு உரிய வகையில் அதை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 516, திரு. க. பழனிசாமி, இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.